




**ப**டித்துவிட்டு வீட்டில் சும்மா இருக்கும் இல்லத்தரசிகள் பலருக்கு 'வேலைக்குப் போகலாமே' என்ற எண்ணம் இருந்தாலும், 'கணவர், குழந்தைகளை அனுப்பியபிறகு சென்று, அவர்கள் வருவதற்குள் திரும்புவதுபோல 'ஃப்ளெக்ஸிபிள்' ஆக வேலை நேரம் இருந்தால் பரவாயில்லை' என்பதுதான் விருப்பமாக இருக்கிறது. ஆனால், இங்கே இருக்கும் ஆபீஸ் சூழலில் அது சாத்தியமா?






"சாத்தியமே!" என்று கூறுவதோடு, பல்லாயிரம் பெண்களுக்கு அதுபோன்ற ஒரு விருப்ப நேர வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் 'நெட்வொர்க்'கையும் உருவாக்கி சாதனை படைத்திருக்கிறார், சென்னையைச் சேர்ந்த சௌந்தர்யா ராஜேஷ்.

'அவ்தார் கரியர் க்ரியேட்டர்ஸ்' என்னும் இவருடைய நிறுவனம், படித்த பெண்களுக்கு பொருத்தமான வேலையை - முழுநேரமாகவோ, பகுதிநேரமாகவோ, விருப்ப நேரமாகவோ ஏற்படுத்தித் தருகிறது. அதற்கு நீங்கள் செய்யவேண்டியதெல்லாம், அவர்களுடைய நெட்வொர்க்-கில் 'ஜஸ்ட் ஒரு க்ளிக்' மூலமாக உங்களை இணைத்துக் கொள்ளவேண்டியது மட்டுமே!

இந்தப் புதுமையான ஐடியாவுக்காகவே, சமீபத்தில் கவின்கேர் நிறுவனத்தின் 'சின்னிகிருஷ்ணன் இன்னவேட்டிவ் அவார்டு' என்ற விருதையும் பெற்றிருக்கிறார் சௌந்தர்யா. இந்த விருதுக்காகப் பரிந்துரைக்கப் பட்ட 159 பேரிலிருந்து தேர்வான மூவரில் இவரும் ஒருவர்!

'அவ்தார்' நிறுவனம் மூலமாக வாழ்வில் புதுஅவதாரம் எடுத்திருக்கும் சௌந்தர்யாவை ராயப்பேட்டையில் அவருடைய அலுவலகத்தில் சந்தித்தோம். வெகுநேர்த்தியாக, தெளிவாக, அழுத்தமாகப் பேசுகிறார்.